15th March 1966]

Post-Graduate Medical Education Centre

* 290 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Madras Government have proposed to establish a post-graduate medical education centre in the State; and

(*b*) if so, the details thereof and the benefits to accrue therefrom ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) Yes.

(*b*) Details have not yet been finalised. Training will be given to candidates in certain higher specialities like Neurosurgery, Thoracic Surgery and specialised treatment and medical research work will also be carried out.

திரு. வை. சங்கரன் : இந்த இன்ஸ்டிட்யூஷன் ஆரம்பிக்க ஒரு சில ஆண்டுகளாகவே முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. என்ன காரணத்தால் தாமதமாகிக் கொண்டு வருகிறது என்று சொல்ல முடியுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்த போஸ்ட் கிராஜுவேட் இன்ஸ்டிட்யூஷன் ஆரம்பிக்கவேண்டுமென்றால், ரூ. 5 கோடி செலவாகும். அவ்வளவு செலவு பண்ண மாகாண அரசாங்கத்திற்கு தற்போது உத்தேசம் இல்லை. மத்திய அரசாங்கம் ஓரளவு பங்கு கொள்ளவேண்டும். ஆகவே, அவர்களுடைய முடிவையும் அபிப்பிராயத்தையும் நமது அரசாங்கம் எழுதிக் கேட்டிருக்கிறது. முடிவு வந்த பிறகு எப்பொழுது எடுத்துக்கொள்ளலாம் என்பது நிர்மானிக்கப்படும்.

திரு. வை. சங்கரன் : இதிலே ஸ்டாஃப் ப்ரோபசர்கள் எல்லாம் தேர்ந்தெடுக்க நான்-கிளினிகலாக அதாவது பிரைவேட் ப்ராக்டிஸ் இல்லாத அசிஸ்டன்ட் சர்ஜன்களை வைத்துக் கொள்வதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கனம் அங்கத்தினர் அவர்களுடைய கேள்வி எப்படியிருக்கிறதென்றால் ஒருவன் மனைவியைப் பார்த்து, "பெண்ணே, பெண்ணே பசு வாங்கப் போகிறேன்" என்று சொன்ன உடனே அவள், "பிறந்த வீட்டிற்கு மோர் கொடுப்பேன்" என்று கூறியது போல் இருக்கிறது. இன்னும் திட்டமே உருவாகவில்லை. அதற்குள் உத்தியோகத்தைப் பற்றிய நினைப்பு வந்திருக்கிறது.